**O.S.157/2021**

Date : 20.11.2023

பி.சா.1 : தங்கராஜா

<u>பி.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்</u>

வழக்கின் வாதி சாமுவேல் மூன்றடைப்பு காவல் நிலையத்தில் தன்னுடைய தாவா சொத்தில் இடைஞ்சல் செய்ததாக கூறி புகார் அளித்த பின்புதான் நான் பட்டா வேண்டி மனு அளித்தேன் என்றால் அதற்கு முன்பாகவே மனு அளித்தேன். அவ்வாறு நான் மனு அளித்ததற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் வழக்கறிஞர் என்னிடம் எல்லா விவரங்களையும் கேட்டுதான் எதிர் வழக்குரை தாக்கல் செய்தார். அதில் ஆங்கிலத்தில் தட்டச்சு செய்யப்பட்டிருந்தாலும் அதில் உள்ள விவரங்கள் தெரியும். அந்த எதிர்வழக்குரையில் வீடு கட்டியிருப்பதாகவும், ஹாலோபிளாக் கம்பெனி வைத்திருப்பதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் சொல்வதுபோல் எந்த விவரமும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. வாதி இந்த நீதிமன்றத்தில் வழக்கு சொத்தைபொறுத்து பிரதிவாதிகள் எந்த இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று ஒரு உறுத்து கட்டளை பரிகாரம் வாதி தாக்கல் செய்திருந்த விவரம் எனக்கு தெரியாது. அந்த உறுத்து கட்டளை பரிகாரம் சம்மந்தமாக என் வழக்கறிஞர் ஒரு எதிருரை தாக்கல் செய்திருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த பதில் உரையில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். இடைக்கால மனுவிலும் வீடு கட்டியிருப்பதாகவும், ஹாலோபிளாக் கம்பெனி வைத்திருப்பதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் 10 வது ஆவணமாக தாக்கல் செய்துள்ள ஆவணமான கிஸ்தி ரசீது 2018 ம் வருடம்தான் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அந்த கிஸ்து ரசீது அடிப்படையில்தான் நான் அந்த இடத்தில் அனுபவத்தில் இருப்பதாக சொல்கிறேன் என்றால் 1979 ல் எனது தாத்தா கிரையம் வாங்கி தேதியில் இருந்து தற்போது வரை நாங்கள் தான் அனுபவத்தில் இருக்கிறோம் . நான் சொல்வது போல் 1979 ல் இருந்து 2018 வரை நாங்கள் தான் அனுபவத்தில் இருக்கிறோம் என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணங்கள் போடவில்லை பத்திரம் மட்டும்தான்

வைத்துள்ளேன். வழக்கு தாவா சொத்தில் தற்போது எனக்கு வழங்கப்பட்டுள்ள பட்டா சம்மந்தமாக DRO விடம் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் நான் எந்த காலத்திலும் அனுபவத்தில் இல்லை என்றாலும் 2018 ல் வாதி என் மீது காவல் நிலையத்தில் புகார் அளித்த பின்புதான் அனுபவத்தில் உள்ளது போன்று ஆவணங்களை உற்பத்தி செய்து வழக்கிற்காக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் வழக்கு சொத்திற்கும் எனக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. 1979 ல் என் தாத்தா தங்கசாமி நாடார் ஐயா துரை என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளதில் ஐயா துரை நாடாரின் மூல ஆவணங்கள் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராது படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.